7th November 1966]

யிலும் அங்குள்ள அதிகாரிகள் வேடிக்கையாக பார்த்துக்கொண்டு, அதற்கு ஆதரவாக இருந்தார்களா? இப்படி நடப்பதை தடுப்பதற்கு முயற்சி செய்தார்களா? தடுக்கவில்லை என்றால் அந்த அதிகாரிகள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது டெலிபிரேட்டாக 'ஃப்ரன்ட் சைடில்' நடைபெறவில்லை. 'பேக் சைடில்' ஒரு சில நிமிடங்களில் நடந்திருப்பதாக தகவல். ஆகவே, இதை முன்கூட்டியே தடுத்திருக்கவேண்டும் என்பதற்கு வழியில்லை.

திரு. எம். எஸ். மணி: இவ்வித ஒழுங்கீனம் நடந்த திருச்சி நகராட்சி மன்றத்தை கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது தனிப்பட்ட அங்கத்தினர் ஒருவரின் தவறு. இது நகராட்சி மன்றத்தின் தவறு என்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறார்களா? (சிரிப்பு)

கனம் சபாநாயகர்: நீங்களும் அவரைக் கேட்டால் எப்படி? கௌன்ஸிலுக்கு இதில் பொறுப்பில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் ஒருவருடைய தவறுக்கு கௌன்ஸில் பொறுப்பாகாது என்பது என்னுடைய எண்ணம்.

*Mofussil bus stand in City*

*497 Q.—Sri A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Local Administration be please to state—

(a) whether there is a proposal to shift the Mofussil Bus Stand from Basin Bridge to Mint from where it was shifted when the work of constructing a bridge was taken up: and

(b) if so, when it will be implemented?

கனம் திரு. சே. ம. மஜீத்: (அ) & (இ) இவ்விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

நகரசபை உப தேர்தல்கள்

*498 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச அவசர நிலையையொட்டி தற்போதைக்கு நகரசபை உப தேர்தல்களை ஒத்திவைக்கும்படி தமிழ்நாடு அரசு உத்திரவு போட்டதா?